28

சிதையருகில்

நானும் மயானத்திற்குப் போயிருந்தேன். அவளுடைய தாயார் ஊரிலிருந்து வந்து, எடுப்பதற்கு, *10* மணி ஆகிவிட்டது. சுடுகாட்டிற்குப் போய் வேறே, குளிகன் வந்து விட்டதென்று சிதையில் வைத்து நெருப்புப் போடுவதற்கு அரைமணி நேரம் காத்திருந்தார்கள்.

சிதை அடுக்கித் தயாராக இருந்தது. அவளை அதில் வைத்த பிறகு மேலே அடுக்க வேண்டிய விராட்டிகள் அருகில் ஒரு பக்கம் குவிக்கப் பட்டிருந்தன. விறகும் விராட்டியும் ஏதோ பழி தீர்த்துக்கொள்ள காத்திருந்தது போலிருந்தது. பாடையை சிதையின் அருகே வைத்திருந் தார்கள்.

நானும் அந்தக் கூட்டத்தில் நின்றுகொண்டு அவள் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். முகத்தில் இறுக்கிக் கட்டியிருந்த பாடையின் கயிறு நெற்றியிலும், கன்னங்களிலும் பள்ளமாக அடையாளம் செய்திருந்தது. மற்றபடி தூங்குகிறவள் போலத்தான் தென்பட்டாள்.

வெய்யிலேறி விட்டபடியால் கீழே பொடி ஒட்டிக்கொண்டது. மனிதன் மடிந்து மடிந்து சாம்பலான பொடியானதால் தான் அப்படி ஒட்டிக்கொண்டதோ?

ஸரஸு நாளைக்கு அந்தப் பொடியுடன் பொடியாகி விடுவாள்!

சீச்சி!

ஸரஸுவுக்கு சாவேது? தவறுதலாகவல்லவா சுடுகாட்டிற்குக் கொண்டு வந்துவிட்டார்கள் போலிருக்கிறது!

'ஆமாம்! பதினேழு வயதுதான் ஸரஸுவிற்கு, அதற்குள்ளா சாவு? அவளாக அதை வரவழைத்துக் கொண்டாளோ? ...

இந்த மாதிரியாக, அந்தப் பாடையின் பக்கத்தில் நின்றுகொண்டு நான் யோசிக்கலானேன்.

கொட்டகையில் நானும் ஒரு பக்கம் போய் உட்கார்ந்தேன். கீழே கிடந்த சிறு எலும்புப்பொடிகளைப் பொறுக்கி ஒன்றாகக் குவித்தேன்.

தினமணி – வருஷமலர், 1938

'நான் என்ன சேவேண்டி? கிளியெ வளத்து பூனெ வாயிலெ வச்சூட்டேனே!' என்று தாயார் புலம்பினாள்.

'பாவி, என் கொழந்தயெக்கொலைச் சூட்டானே! மானி எங்கிட்டெ சொல்லாமெ பிராணனெ விட்டூட்டாளே!' என்று மாப்பிள்ளை காதில் படும்படியாக மாமியார் உரக்க அழுதாள்.

ஸரஸுவின் கணவன், கிராப்பு தலையுடனும், மூல கச்சத்துடனும், இடது பக்கம் பூணூலுடனும் ஒரு பக்கம் உட்கார்ந்திருந்தான். அடிக்கடி அவன் பிரேதத்தைத் திருட்டுப் பார்வை பார்த்ததை நான் கவனித்தேன்.

'ஸரஸுவிடம் என்ன குறை தென்பட்டதடா உனக்கு?' என்று மனதில் கேள்வி கிளம்பிற்று. அவனை அப்படியே கேட்டு விடுவேனோ என்று பயந்தேன்.

பக்கத்தில் நெருப்புச் சட்டியிலிருந்து புகை கிளம்பிற்று. என் மனத்துயரம் 'ஏன் அன்றே, உடனேயே, செய்யாமற் போனேன்?' என்ற கேள்வியுடன் புகைந்து வந்தது. என்னை மீறிக் கண்ணில் குபீலென்று நீர் பெருகிற்று. யாரும் கவனிக்காமலிருக்க வேண்டுமே என்று பயந்து சட்டென்று நெருப்புச் சட்டியின் பக்கமாகப் போய் புகையை முகத்தில் வாங்கினேன். கண்களில் புகையேறிச் சிவந்துவிட்டன. தலை கிர்ரென்று சுற்றிற்று.

★★★

அன்று சாயங்காலம் ஸரஸு காவேரி மணலில், ஊற்றில், ஜலம் எடுத்துக் கொண்டிருந்தாள்.

நான் மணலில் துண்டை விரித்துக்கொண்டு படுத்த வண்ணம் என் வாழ்க்கையில் ஒரு போக்கு இல்லாததைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தேன். பக்கத்தில் என் நண்பன் கோபு ஏதோ பேசிக் கொண்டிருந்தான். அதொன்றும் என் காதில் படவில்லை.

திடீரென்று அவன் 'அந்த பெண்ணைப்பார், எவ்வளவு அழகாக இருக்கிறாள்!' என்றான்.

தலையைத் திருப்பிப் பார்த்தேன். 'எங்கள் எதிர் வீட்டு நாட்டுப் பெண் ஸரஸு!' என்று சொல்லிக்கொண்டு இதுவரையில் நான் அவ்வளவு கூர்மையாக கவனித்திராத அவள் முகத்தைக் கொஞ்சம் கூர்ந்து பார்த்தேன்.

அவ்வளவு தூரத்தில் அவள் முகத்தோற்றம், அந்த மங்கும் நேரத்தில் அவ்வளவு தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், ஓர் மெய்மறதியுடனும், சலிப்புடனும் கூடினவைகளாகத் தென்பட்டது. அவளுடைய ஒவ்வொரு செய்கையும்.

குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்ட பொழுதுதான் அவள் எங்களைப் பார்த்தாள். அவள் மேல் பதிந்திருந்த என் பார்வையை

அவள் கண்கள் கண்டன.

அவள் கரையேறிச் சென்ற வெகுநேரம் வரை நான் அந்த திக்கையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

அன்றிரவு சித்திரைப் பௌர்ணமி. நான் வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்தேன். ஒன்பது மணியிருக்கும். நிலா பளிச்சென்று காய்ந்து கொண்டிருந்தது.

ஸரஸு வாசற் கதவைத்திறந்து கொண்டு அவர்கள் வீட்டு வெளித் திண்ணை யோரத்தில் வந்து நின்றாள். நிலவொளியில் அவள் காது களிலும் மூக்கிலுமிருந்த வைரங்கள் பல வர்ண ஜ்வாலை விட்டு எரிந்தன.

திண்ணையிலுட்கார்ந்திருந்தவன், ஏதோவொரு வேகத்தில் தொண்டை யில் ஏதோ இருப்பது போல கனைத்தேன். ஆகாயத்தை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தவள் சட்டென்று நான் இருந்த பக்கம் திரும்பிப் பார்த்தாள். பார்த்து யார் என்று அறிந்த பிறகும் அந்தப் பார்வை திரும்பவில்லை. ஒரு நிமிஷம், நினைவழிந்ததுபோல, அப்படியே இருந்தது.

வாசலில் போகிறவர்களில் ஒருத்தி ஸரஸு வாசலில் நிற்பதைக் கண்டு 'நீ கோவிலுக்கு வரயோ ஸரஸு?' என்று கேட்டாள்.

'எனக்கு வீடுதான் கோவில்!' என்று ஸரஸு சொன்னாள்.

'நீ கோவிலுக்கு வரயோ?'

அந்தக் கேள்வி எதிரொலித்துக் கொண்டே என்னுள் சென்று நாடித் துடிப்பின் மூலம் உடல் பூராவும் பரவிற்று.

ஸரஸு சற்று நேரம் அங்கு நின்றாள். பிறகு திரும்பி மெல்ல உள்ளே போகலானாள். அப்பொழுது அவள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டது போல எனக்குத் தோன்றிற்று. ரேழியில் நுழைந்து வாசற்கதவை மெதுவாக மூடினாள்; ஆனால், தாளிடவில்லை!

அவளுடைய உள்ளத்தின் கதவிற்கு,-அவள் எனக்காகத் திறந்து வைத்திருந்த கதவிற்கு-தாளிடவில்லை.

நான் வெளியில் தயங்கிக்கொண்டு நின்றேன். 'போ!போ!' என்று பிடரியைப் பிடித்துத் தள்ளிற்று உள்ளேயிருந்த வேகம்.

'ஏய்! ஜாக்கிரதை!' என்று யாரோ சொல்லுவது போலவே காதில் பட்டது. மேலே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த சந்திரன் வாய்மேல் கைவைத்து எச்சரிக்கை செய்வது போலிருந்தது...

காலம் சென்றது. காத்திருந்தவள் கண்ணயர்ந்து விட்டாள். இனிமேல் நான் அவளைப் போய் எழுப்ப முடியாது. காத்திருந்ததில் அவள் அழகு குலைந்துபோய்விட்டது. கண் பூத்துப்போய் விட்டது. மூச்சும் அடங்கிவிட்டது.

நான் அருகே நின்று கொண்டிருந்தபோது என்னுள்ளேயிருந்து குரல்

கிளம்பிற்று. 'ஸரஸு! நான் வந்து விட்டேன், வந்துவிட்டேன்!' என்று அலறிற்று. அவள் காதில் படவில்லை. யார் கதவைத் திறப்பார்கள்?

★★★

'பிரேதம், பிரேதம்' என்று வாத்தியார் மந்திரம் சொன்னது காதில் பட்டது.

ஆமாம்! ஸரஸுபிரேதம். அவள் இறந்து போய்விட்டாள். அவள் குரல் என் ஹிருதயத்தில் சாகவில்லையே! அவள் கூப்பிட்டது இன்னும் எதிரொலித்துக்கொண்டே இருக்கிறதே! நான் பதில் சொல்லியாக வேண்டுமே, எங்கு, யாரிடம் சொல்லுகிறது?...

கழுத்து வரை மூடிவிட்டார்கள். ஆச்சு! மூன்று விராட்டி! முகம் மறைந்துவிடும்!

கடைசி முறையாக முகத்தைப் பார்தேன்.

வாழ்க்கையின் துன்ப இரவு முடிந்து அதன் இறுதியில் களைப் படைந்து ஸரஸு தூங்கினாள்.

மரணம் என்ற மாய விராட்டி எங்கிருந்தோ வந்து அவளைச் சூழ்ந்து கொண்டுவிட்டது.

●